டிலுமே அவர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லியும் கூட அவ்வாறு அறிவிக்கப்படவில்லை. அதன் காரணத்தினால் அவர்களுக்கு கிராஜுயுடி, பென்ஷன் போன்ற எந்தவிதமான சலுகைகளும் தரப்படவில்லை. நமது அரசு பல பேர்களுக்குத் தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்புக்களில் இருக்கக்கூடியவர்களுக்கு முக்கியமான பல உயர்ந்த பதவியிலே இருக்கின்றவர் களுக்கு எல்லாம் அடிக்கடி நன்மைகள் செய்து கொண்டிருக்கிறது, ஆனால் இது வரையில் கோரிக்கையே அதிகமாக வைக்காத அவர்களையும் கவனிக்க வேண்டும். வெள்ள காலங்களிலும் மற்ற காலங்களிலும் இரவு பகல் என்று பாராமல் அந்தத் தொழிலாளர்கள் இந்த நாட்டிற்கும் அரசுக்கும் உதவி செய்து வருகிறார்கள். அவர்களுடைய நீண்டநாளைய கோரிக்கையை ஏற்று அவர்களை யெல்லாம் விரைவிலே அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல முக்கியமான வடிகால் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட இருக்கின்றன. சென்ற கூட்டத் தொடரின்போதே நான் அவற்றை யெல்லாம் பேசியிருக்கிறேன். வடிகால் திட்டம் முக்கியமானது ஆகும். முள்ளியாற்றிலே ஒரு ஸ்ட்ரைட் கட் வெட்டி வடிகால் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(6) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி.

(ஆ) மாலை நேரக் கூட்டத்திற்கு அவையில் 'டீ' வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, இன்றைய தினம் மாலை 4 மணிக்கு நாம் திரும்பவும் இங்கே கூடி விவாதிக்க வேண்டி யிருக்கிறது. நேற்றையதினம் 4 மணி அளவில் கூடியபோது கோரம் இல்லாமல் இருந்தது. கோரம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், 4 மணி என்று கூறுகிற போது அது டீ சமயமாக இருப்பதால் தான். ஆகவே, ஒன்று 4-30 மணி அல்லது 5 மணிக்கு வைக்க வேண்டும் அல்லது டீ ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் டீ சாப்பிட்டு விட்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நம்முடைய திரு. ஜேம்ஸ் அவர்களின் கோரிக்கையின்பேரில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு, டீ வழங்க ஏற்பாடு செய்யப் படும்.